# தமிழ் நாடு வக்ஃப் வாரியம். சென்னை

## அறிவிப்பு

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் வக்ஃப் குழுக்களை அமைக்க தமிழ்நாடு வக்ஃப் வாரியம் முடிவு செய்துள்ளது. இதற்கான உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்வதற்கு (1) நீதியரசர் திரு.K.N.பாஷா (ஓய்வு) (2) திரு.K.அலாவுதீன், I.A.S. (ஓய்வு) மற்றும் (3) அரசு தலைமை காஜி ஜனாப்.முப்தி சலாஹுத்தீன் முஹம்மது அய்யூப் ஆகியோர்களை கொண்ட தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட குழுக்களில் பிரிவு 1 : மாவட்ட காஜி அல்லது டவுன் காஜி, பிரிவு 2 : நகர திட்டமிடல் அல்லது வணிக நிர்வாகம், சமூக தொண்டு, நிதி அல்லது வருவாய், விவசாயம் மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் திறன் வாய்ந்த ஒருவர், பிரிவு 3 : ஓய்வு பெற்ற வருவாய் துறை துணை ஆட்சியர் அல்லது அதற்கு நிகரான அலுவலர் ஒருவர் (அவ்வாறான நபர் இல்லையெனில் ஓய்வு பெற்ற வட்டாட்சியர் அல்லது அதற்கு நிகரான அலுவலர் ஒருவர்). பிரிவு 4 : ஒரு வழக்கறிஞர் – (விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தகுதிக்குட்பட்டு) ஆகியோர் இடம் பெறுவர்.

மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் மாவட்ட வக்ஃப் குழுக்களில் செயல்பட விருப்பமுள்ள இஸ்லாமியர்கள் விண்ணப்பங்களை www.tnwakfboard.com என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தோ அல்லது தமிழ் நாடு வக்ஃப் வாரிய தலைமை அலுவலகம் மற்றும் சரக அலுவலகங்களில் பெற்றோ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 01.06.2020க்குள் முதன்மை செயல் அலுவலர், தமிழ் நாடு வக்ஃப் வாரியம், எண்.1, ஜாபர் சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை–600 001 என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது tnwakfboard@gmail.com என்ற மின்அஞ்சல் மூலமாகவோ அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இடம் சென்னை
நாள் : 14.05.2020

முதன்மை செயல் அலுவலர்,
தமிழ் நாடு வக்ஃப் வாரியம்.